தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
3.8.2024 (சனிக்கிழமை)

ஜிப்மரில்

# உலக தாய்ப்பால் தின விழிப்புணர்வு ஊர்வலம்

கோரிமேடு, ஆக.3-

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் முதல் வாரம் உலக தாய்ப்பால் விழிப்புணர்வு வாரமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையின் செவிலியர் துறை, செவிலியர் கல்லூரி, குழந்தைகள் நலத்துறை, பச்சிளம் குழந்தைகள் நலத்துறை மற்றும் மகப்பேறு மருத்துவம் ஆகிய துறைகள் சார்பில் தாய்ப்பால் விழிப்புணர்வு வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனை முன்னிட்டு ஜிப்மர் செவிலியர் கல்லூரி மாணவ-மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று நடந்தது. மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையின் செவிலியர் கண்காணிப்பாளர் சாந்தி ஊர்வலத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

கல்லூரி வளாகம் முன்பு தொடங்கிய ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் கல்லூரி வளாகத்தில் முடிவடைந்தது. இதில் தாய்ப்பாலின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த வாரம் முழுவதும் தாய்ப்பால் குறித்த விழிப்புணர்வு நாடகம், விளக்க படங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.